வழியில்லை. சுவையான பாலை மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால், சுவையான பால் கறக்கும் மாட்டை வாங்கி வைத்து பாலைக் கறந்து குடிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** * * என்பதை நீக்கவும்.

**நெல்லை மாவட்டம், கூடங்குளத்தில் புதிய அனல் மின் நிலையம் அமைத்தல்.**

98 (*வினா எண். 12152)—**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், கூடங்குளத்தில் புதிதாக அனல் மின் நிலையம் அமைக்க மைய அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம், எனில் பணி எப்போது துவக்கப்படும்?

(இ) இதன் மூலம் எவ்வளவு மெகாவாட் மின் உற்பத்தி கிடைக்கும்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இன்னும் அரசு அனுமதி வழங்கவில்லை. (ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணு மின் நிலையம் அமைக்க கூடங்குளம் பொருத்தமான இடம்தான் என்பதை அரசு முடிவு செய்துவிட்டதா? அந்தப் பகுதியில் பல ஏக்கர் நிலம் கையகப் படுத்தப்பட்டிருக்கிறதே அந்த நிலத்தின் மொத்த பரப்பளவு எவ்வளவு? அதற்கு நிர்ணயித்த தொகை எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத தலைவர் அவர்களே, சைட் செலக்ட் கமிட்டி என்று மைய அரசின் அணுசக்தி இலாக்கா நியமித்த அந்தக் குழுவும் 1976-லும், 1981—லும் மீண்டும் எற்படுத்தப்பட்ட ஒரு நிபுணர் குழுவும், கூடங்குளம் பொருத்தமான இடம்தான் என்ற அபிப்பிராயத்தை தெரிவித்திருக்கிறது. ஆனால் இன்னும் மைய அரசு அதைப் பற்றி இறுதி முடிவை எடுத்து அறிவிக்கவில்லை.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1987 மார்ச் 6]

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அமைச்சர் பெருமகனார் தன்னுடைய பதிலில் அணு மின் நிலையம் என்று சொன்னாலும் கேள்வியிலே அனல் மின் நிலையம் என்று எழுதப்பட்டிருக்கிறது. அது அணுமின் நிலையமாக வர வேண்டும். கூடங்குளம் சரியான இடம்தான் என்று அந்தக் குழு நிர்ணயித்திருப்பது பாராட்டுக்குரியது. அமைச்சர் பெருமகனார் சொல்லும்போது மத்திய அரசிடமிருந்து வருகிற அனுமதி பற்றி குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே சட்டமன்றத்திலே நான் அதைப்பற்றி ஒரு வினா எழுப்பியபோது முன்பிருந்த அமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் உறுதியளித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதன் பிறகு இப்போதுள்ள மின்துறை அமைச்சர் அவர்கள் இதைப் பற்றிச் சொன்னார்கள். அண்மையில் பாரதியார் சிலை திறப்பு விழாவிற்கு டில்லிக்கு வந்திருந்த முதலமைச்சரிடம், இதை மத்திய அரசிடம் பெற்றுத் தர வேண்டுமென்று சொன்னேன். இது வராமல் இருப்பதற்குரிய முக்கியமான காரணம் குடிநீர் பற்றாக்குறை என்று அணுசக்தி தலைவர் ஸ்ரீனிவாசன் சொன்னார். குடி தண்ணீர் பற்றாக் குறை என்பது நமது மாநிலத்தைப் பொறுத்தது. பக்கத்திலே உள்ள பொய்கை அணை, மாம்பலத்தாறு அணை, ஆலந்தலையாறு அணை ஆகியவற்றை மாநில அரசு அமைத்துவிட்டால் தண்ணீர் தாராளமாகக் கிடைக்கும். மத்திய அரசாங்கம் அணு மின் நிலையத்தை ஏற்படுத்தச் செய்தால் மத்திய அரசின் நிதியையும் பெறலாம். இந்த இரண்டு பயன்களையும் பெற்றுக் கொள்ள முடியும். எனவே மாநில அரசு இதைப் பற்றி விரைந்து மத்திய அரசாங்கத்தோடு பேசி முடிக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை தமிழக முதல்வர் பாரதப் பிரதமருக்கு 13 கடிதங்களை எழுதியிருக்கிறார். 1984-இல் மூன்று கடிதங்கள், 1985-ல் 4 கடிதங்கள், 1986-இல் 6 கடிதங்கள். கடைசியாக எழுதப்பட்ட கடிதம் 16—2—1987-இல் எழுதப்பட்டிருக்கிறது முதல்வரவர்கள் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் நிலத்தைப் பொறுத்தவரையிலும், நீரைப் பொறுத்தவரையிலும் வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும், இலவசமாகக் கொடுப்பதற்கும் தயாராக இருப்பதாகவும், அதனால் இரண்டாவது அணு மின் நிலையம் வர உதவி செய்ய வேண்டுமென்றும் எழுதி இருக்கிறார்கள். மீண்டும் அதைப் பற்றி வலியுறுத்துவார்கள்.

திரு. கைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்ற கொள்கை முடிவை அரசு அறிவித்தது. அதன்படி தனியார்கள் யாராவது மின்சாரம் உற்பத்தி செய்ய முன் வந்திருக்கிறார்

களா ? அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதா ? வட சென்னையில் அனல் மின் நிலையத்திற்கு 150 இலட்சம் டாலர் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக ஆளுநர் உரையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அந்தப் பணி எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மின்சாரம் நிலக்கரி அடிப்படையில் உற்பத்தி செய்வதற்கு 4 ஆண்டுகள் ஆகும் என்கிறார்கள். அணு அடிப்படையில் உற்பத்தி செய்தால் 8, 10, 12 ஆண்டுகள் ஆகுமென்று சொல்லுகிறார்கள். நீரின் அடிப்படையில் புனல் மின் நிலையம் அமைக்கவேண்டுமென்றால் 6,7 வருடங்கள் ஆகுமென்று சொல்லுகிறார்கள். குறிப்பாக தமிழ் நாட்டில் விவசாயிகளுக்கு தேவையான நீரை இறைக்க, பம்புகளுக்கு இணைப்பு கொடுக்க நமக்கு மின்சாரம் தேவைப்படுகிறபோது, விரைவில் பெட்ரோலியம் சம்பந்தமான திரவ எரி பொருள்கள் அல்லது உயர் சக்தியுள்ள நிலக்கரியை இறக்குமதி செய்ய அனுமதி கொடுத்தால் நிச்சயம் உற்பத்தி செய்யலாம். தனியார்கள், மத்திய, மாநில அரசுகளிடமிருந்து பணத்தை எதிர்பார்க்காமல், 110, 210, 500, 675 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையங்களை தமிழகத்தில் அமைக்கத் தயாராக இருக்கிறார்கள். நிலக்கரி உற்பத்தியாகும் வட புலங்களிலிருந்து தமிழ்நாடு வெகு தூரத்தில் இருப்பதால், இதை ஒரு விசேஷ காரணமாகக் கருதி, நிலக்கரியை இறக்குமதி செய்யவும், பெட்ரோலியம் திரவப் பொருள்களை—சி. எச்., எல்.எஸ்.எச்.—கொடுக்கவும் முன்வர வேண்டும். பலர் ஏற்கெனவே மனு போட்டிருக்கிறார்கள்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சேலம் மாவட்டம் சேகோசர்வ் தொழில் கூட்டுறவுச் சங்கம்

99—(*வினா எண். 5238)—திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் சேகோசர்வ் தொழில் கூட்டுறவு சங்கத்தில் எத்தனை பேர்கள் உறுப்பினர்களாக உள்ளார்கள்?

(ஆ) இச்சங்க உறுப்பினர்களது மூலப்பொருளான மரவள்ளிக்கிழங்கு விலையை ஒரே சீராக வைத்திருக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?